**அக்டோபர் – 28**

# TNPSC துளிகள்

- இந்திய வானிலை ஆய்வு மையமானது தெற்கு ஆசியாவில் திடீர் வெள்ளப் பெருக்கு வழிகாட்டுச் சேவையைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளது.
    - இந்தச் சேவை தெற்கு ஆசியப் பகுதிக்கான அதன் இதே வகையைச் சேர்ந்த முதலாவது சேவையாகும்.
- தமிழ்நாடு மாநில அரசானது 80,000றக்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளில் திறன்மிகு கரும்பலகைத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.
    - இந்தத் திட்டமானது டிஜிட்டல் வகுப்பறைகளுடன் சேர்த்து ஒருங்கிணைந்த காட்சிசார் கற்பித்தல் பொருளின் பயன்பாட்டை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையமானது நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்சார உற்பத்தி ஆலைகளுக்கான அபராதம் மற்றும் ஊக்கத் தொகை மீதான செயல்முறை குறித்த உமிழ்வு விதிகளைப் பூர்த்தி செய்தலுக்கான பணி ஆவணம் என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- தேசிய அடையாளம் காணுதல் தரவுத் தளத்தில் முகம்சார் அடையாளம் காணல் முறையை இணைக்கும் முதலாவது நாடு சிங்கப்பூர் ஆகும்.
- 1962 ஆம் ஆண்டின் இந்திய-சீனப் போர் குறித்த ஜோஹிந்தர் போர் நினைவகமானது அருணாச்சலப் பிரதேசத்தில் பும் லாவில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.
- 108 கிலோ மீட்டர் நீளத்திற்குத் தொடரமைப்பு கொண்ட மிகவும் நீளமான பேருந்து விரைவுப் போக்குவரத்து அமைப்பைக் கொண்ட இந்தியாவின் ஒரே நகரம் சூரத் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## ஊரக இந்தியாவில் ஊட்டச்சத்து உணவைப் பெறும் நிலை

- இது சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி மையப் பொருளாதார அறிஞரான கல்யாணி ரகுநாதன் மற்றும் இன்ன பிறரால் மேற்கொள்ளப் பட்ட ஒரு ஆய்வாகும்.
- இந்த ஆய்வானது ஒரு நாளைய உணவின் மதிப்பு ரூ.45 (வயது வந்தோருக்கு ரூ.51) என்று கணக்கிடுகின்றது.
- இந்த ஆய்வின்படி, ஊரகப் பகுதியில் வாழும் 4 இந்தியர்களில் மூவர் ஊட்டச்சத்து மிக்க ஒரு உணவைப் பெறுவதில்லை.

## முதலாவது தொகுதி பெண் விமானிகள்

- இந்தியக் கடற்படையானது கொச்சியில் உள்ள டிரோனியர் விமானத்தில் முதலாவது பெண் விமானிக் குழுவைப் பணியில் சேர்த்துள்ளது.
- இது இந்தியக் கடற்படையின் தெற்குக் கடற்படைக் கட்டுப்பாட்டகத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- தளபதி திவ்யா சர்மா, தளபதி சிவரங்கி மற்றும் தளபதி சுபாங்கி சுவரூப் ஆகியோர் இந்த 3 பெண் விமானிகள் ஆவர்.
- 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இந்திய வரலாற்றில் முதன்முறையாக, பெண் விமானிகள் இந்தியக் கடற்படையின் வானூர்திப் பிரிவில் பார்வையாளர்களாக பணி புரியத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இவர்களுக்கு கொச்சியில் உள்ள ஐஎன்எஸ் கருடா என்ற கப்பலில் "பார்வையாளர்களாக" பயிற்சி நிறைவு செய்த பின்பு "கிளை அலுவலர்" (Wings) என்ற பட்டம் வழங்கப் பட்டுள்ளது.

## இ-தார்த்தி புவியியல் தளம்

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அவர்கள் இந்தத் தளத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்தத் தளமானது மேலாண்மைத் தகவல் அமைப்பின் வரைபடம் மற்றும் குத்தகைத் திட்டங்களை ஒருங்கிணைக்க உள்ளது.
- இது புவியியல் தகவல் அமைப்பைப் பயன்பாட்டில் இயலச் செய்திட வழிவகை செய்கின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## எதிர்காலப் பணிகள் அறிக்கை – 2020

- சமீபத்தில் உலகப் பொருளாதார மன்றாமானது இந்த அறிக்கையின் 3வது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- தானியங்கிப் போக்கும் இயந்திரங்கள் மற்றும் மனிதர்களுக்கிடையேயான பணிப் பகிர்வின் புதிய போக்கும் அடுத்த 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்பின் மீதான இடையூறிற்கு ஒரு முக்கியக் காரணமாக இருக்கும்.

## 44வது OECD சர்வதேச இடப்பெயர்வு கண்ணோட்ட அறிக்கை

- இந்தியாவானது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பில் உள்ள நாடுகளுக்கு (Economic Co-operation and Development-OECD) அதிக எண்ணிக்கையிலான இடப்பெயர்வாளர்கள் செல்லுதல் மற்றும் அந்த நாடுகளின் குடியுரிமையைப்

பெறுதல் ஆகியவற்றின் அடிப்படையில் 2வது இடத்தைப் பிடித்துள்ளது.

- இதில் சீனா முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இந்தத் தரவானது OECDயின் வருடாந்திர சர்வதேச இடப்பெயர்வு கண்ணோட்ட அறிக்கையின் 2020 ஆம் ஆண்டுப் பதிப்பில் OECD அமைப்பால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த நாடுகளுக்கு மனித மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் 3வது மிகப்பெரிய நாடாக ரோமானியா உருவெடுத்துள்ளது.

## உணவுத் தட்டின் விலை 2020

- ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டமானது உலக உணவு தினக் கொண்டாட்டத்தின் போது உலகம் முழுவதும் உள்ள உணவுத் தட்டின் விலையை ஒப்பிட்டு, ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் தெற்கு சூடான் முதல் இடத்தில் உள்ளது. இங்கு வாடிக்கையாளர் தமது உணவிற்காக அதிகம் செலவிட வேண்டியுள்ளது.
- இந்தியா பண விகிதத்தின் அடிப்படையில் 28வது இடத்தில் உள்ளது.
- நியூயார்க் மக்கள் உணவிற்காகச் செலவிடும் 0.6% விகிதத்தை ஒப்பிடுகையில், சராசரியாக ஒரு இந்தியர் உணவுத் தட்டிற்காக தமது ஒரு நாள் வருமானத்தில் 3.5% விகிதத்தைச் செலவிடுகின்றனர்..




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## "SANT" ஏவுகணை

- இந்தியாவானது ஒடிசாவின் கடற்கரையில் நிலைப்பாட்டு பீரங்கி எதிர்ப்பு (Stand-off-Anti-tank -SANT) ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இது இந்திய விமானப் படைக்காக வேண்டி பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பினால் மேம்படுத்தப் பட்டுள்ளது.

### பிரம்மோஸ் ஏவுகணை


- மீயொலி வேக ஏவுகணையான "பிரம்மோஸ்" ஆனது ஐஎன்எஸ் சென்னை என்ற ஒரு கப்பலில் இருந்து சோதித்துப் பார்க்கப்பட்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது ஐஎன்எஸ் சென்னையிலிருந்து பிரம்மோஸ் ஏவுகணையின் புதிய கடற்படைப் பதிப்பைச் சோதித்துப் பார்த்துள்ளது.
- ஐஎன்எஸ் கப்பல் ஆனது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு மறைந்திருந்து தாக்கும் வகை கப்பலாகும்.
- பிரம்மோஸ் ஆனது அரபிக் கடலில் ஒரு இலக்கைத் தாக்கியது.
- இது நிலத்திலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் ஒரு மீயொலி வேக ஏவுகணையாகும்.
- மீயொலி வேக ஏவுகணைகள் 2 முதல் 3 மாக் வேகத்தில் பயணம் செய்யும் திறன் கொண்டது.
- இது இந்தியா மற்றும் ரஷ்யாவினால் இணைந்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### 2020 ஆம் ஆண்டின் உலகளாவிய காற்றின் நிலை குறித்த அறிக்கை

- உலகளாவிய காற்றின் நிலை என்பது பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகத்திடமிருந்து பெற்ற நிபுணத்துவத் தரவுகளுடன் சுகாதாரத் தாக்கங்கள் மையம், சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீடுகளுக்கான மையம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- 2019 ஆம் ஆண்டில் நுண்மத் துகள் 2.5 என்ற துகளின் மிக அதிகப் பாதிப்புக்கு உள்ளான முதல் 10 நாடுகளில் இந்தியா, வங்க தேசம், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளும் உள்ளடங்கும்.
- 2019 ஆம் ஆண்டில் மிக அதிக அளவில் ஓசோன் பாதிப்புக்குள்ளான முதல் 10 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- ஒட்டு மொத்தமாக, இந்தியாவில் அனைத்து சுகாதார அபாயங்களிடையே நிகழும் இறப்புகளுக்கான ஒரு மிகப் பெரிய அபாயக் கூறாக காற்று மாசுபாடு விளங்கி வருகின்றது.
- இந்தியாவானது உலகில் மிக அதிகமான மாசுபாடு பாதிப்பு, அதாவது 83.2 μg /கன மீட்டர் என்ற அளவிற்குப் பாதிப்பை எதிர் கொண்டுள்ளது.
- இதனைத் தொடர்ந்து நேபாளம் 83.1 μg /கன மீட்டர் பாதிப்பையும் நைஜீரியா 80.1% பாதிப்பையும் எதிர்கொண்டுள்ளன.

FIGURE 1 Global ranking of risk factors by total number of deaths from all causes in 2019.




# முக்கிய தினங்கள்

## ஐக்கிய நாடுகள் தினம் – அக்டோபர் 24

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று நடைமுறைக்கு வந்தது.
- இத்தினமானது நடைமுறைக்கு வந்த ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- இந்த ஆண்டானது (2020) ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெற்றிகரமான செயல்பாட்டின் 75வது ஆண்டைக் குறிக்கின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நமக்கு தேவையான எதிர்காலம், நமக்குத் தேவையான ஐக்கிய நாடுகள் : பலதரப்பிற்கான நமது கூட்டுப் பொறுப்புடைமையை உறுதி செய்தல்" என்பதாகும்.
- இந்தத் தினமானது இரண்டாம் உலகப் போரின் நேச நாடுகள் தினம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- உலகப் போரின் நேச நாடுகள் 1942 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பை ஏற்படுத்த முயற்சி செய்தன.
- நேச நாடுகளின் முடிவுகள் ஐக்கிய இராஜ்ஜியம், சோவியத் ஒன்றியம் மற்றும் அமெரிக்காவினால் கட்டுப்படுத்தப் படுகின்றன.
- இந்த மூன்று நாடுகளும் "மிகப்பெரிய 3 நாடுகள்" என்றும் அழைக்கப்படுகின்றன.
- சீனாவுடன் சேர்த்து இந்த 4 நாடுகளும் "ஐக்கிய நாடுகளின் 4 காவலர்கள்" என்று அழைக்கப் படுகின்றன.
- ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகியவை அச்சு நாடுகளாகும்.

UN75

2020 AND BEYOND

The Future We Want, UN We Need: Reaffirming our Collective Commitment to Multilateralism

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★